விரும்பவில்லை. இதுபற்றி ஏற்கெனவே சொல்லியிருக்கிறேன். அது புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் கொண்டு வந்த திட்டம். புரட்சித் தலைவி அம்மா அவர்கள் செயல்படுத்திய திட்டம். உங்களுடைய ஆட்சியில் எவ்வளவு percentage பணிகளை முடித்தீர்கள் என்ற விவரத்தை ஏற்கெனவே சொல்லியிருக்கிறேன். அதற்குள் நான் போக விரும்பவில்லை. மாண்புமிகு உறுப்பினர் சொன்ன கோரிக்கை நியாயமானது. ஏற்கெனவே, திருப்பூர் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் கேட்கும்போதும் சொன்னேன். ஒரு திட்டத்தைக் குறிப்பிட்ட ஒரு பகுதிக்காக எடுக்கும்போது, அதிலே மற்ற பகுதிகளைச் சேர்க்க முடியாது. அதனால் வேறு ஏதாவது திட்டங்களை ஆய்வு செய்து, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கோரிய பகுதிகளில் தண்ணீர் கொடுக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. அ. ராமு, உட்காருங்கள். (குறுக்கீடு) வாய்ப்பு வரும்போது தருகிறேன். இப்படியெல்லாம் கேட்கக் கூடாது. வாய்ப்பிருந்தால் தருவோம் அல்லவா? உட்காருங்கள்.

வினா வரிசை எண் 154, மாண்புமிகு உறுப்பினர் திரு. எம். இராமச்சந்திரன், மாண்புமிகு உணவு மற்றும் நுகர்பொருட்கள் வழங்கல் துறை அமைச்சர் அவர்கள்.

154—

நாட்டுச் சர்க்கரை

***5270—திரு. எம். இராமச்சந்திரன்:**

மாண்புமிகு உணவு மற்றும் நுகர்பொருட்கள் வழங்கல் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

நியாய விலைக் கடைகளில் நாட்டுச் சர்க்கரையை விற்பனை செய்ய அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. இரா. காமராஜ், உணவு மற்றும் நுகர்பொருட்கள் வழங்கல் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

2017 ஜூலை 7]

சர்க்கரை ஆலைகளில் தயார் செய்யப்படும் தரமான சர்க்கரை வெளிச்சந்தை விலையில் கொள்முதல் செய்யப்பட்டு, பொது விநியோகத் திட்டத்தின்கீழ் அனைத்துக் குடும்ப அட்டைதாரர்களுக்கும் கிடைக்கும் வகையில், நியாய விலைக் கடைகளின்மூலம் ஒரு கிலோ ரூபாய் 13.50 என்ற மானிய விலையில் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. எனவே, நியாய விலைக் கடைகளில் நாட்டுச் சர்க்கரை விற்பனை செய்ய வேண்டிய அவசியம் எழவில்லை என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 10–50

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. எம். இராமச்சந்திரன் அவர்கள்.*

திரு. எம். இராமச்சந்திரன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வணக்கம். எங்களுடைய செயல் தலைவர் மற்றும் சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் 'நமக்கு நாமே' திட்டத்தின்கீழ் தமிழகம் முழுவதும் பயணம் மேற்கொண்டு, விவசாயிகளையும் சந்தித்தார். நாட்டுச் சர்க்கரை மற்றும் வெல்லம் தயாரிப்புப் பணிகளை விவசாயிகளே தொழிலாக மேற்கொண்டு வருகின்றனர். திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய தேர்தல் அறிக்கையிலும் இதுகுறித்துச் சொல்லப்பட்டிருக்கிறது. வெல்லமும், நாட்டுச் சர்க்கரையும் மக்கள் மத்தியில் இப்போது அதிகமாக உபயோகப்படுத்துகின்ற ஒன்றாக இருக்கிறது.*

(உறுப்பினர் திரு. அ. ராமு அமைச்சர்கள் இருக்கை பகுதிக்கு வந்து சென்றார்.)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *திரு. இராமச்சந்திரன், ஒரு நிமிடம் உட்காருங்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. ராமு, நீங்கள் உங்கள் இருக்கைக்குச் செல்லுங்கள். நீங்கள் ஏற்கெனவே ஒரு மூலக் கேள்வி கேட்டிருக்கிறீர்கள்; 4 துணைக் கேள்விகள் கேட்பதற்கும் இந்தக் கூட்டத் தொடரில் நான் உங்களுக்கு வாய்ப்புக் கொடுத்திருக்கிறேன். இன்றைக்கு ஏறக்குறைய 20, 30 உறுப்பினர்கள் குடிநீர் வழங்குவது தொடர்பாகக் கேள்வி கேட்டார்கள். ஆகவே, கேட்காத உறுப்பினர்களுக்குத்தான் நான் வாய்ப்புக் கொடுக்க வேண்டியிருக்கும். இதுபோன்று, இன்றைக்கு நீங்கள் சபையில் ஒழுங்கீனமாக நடந்து கொண்டதை*

வன்மையாகக் கண்டிக்கிறேன். இது முறையல்ல. உங்களுடைய இருக்கைக்குச் சென்று உட்காருங்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. எம். இராமச்சந்திரன், பேசுங்கள்.

திரு. எம். இராமச்சந்திரன்: ஆகவே, நாட்டுச் சர்க்கரை என்பது மக்கள் மத்தியில் அதிகமாக உபயோகப்படுத்துகிற ஒன்றாக ஆகிவிட்டது. ஏனென்றுசொன்னால், சீனியில் chemical இருக்கின்ற காரணத்தினால், சீனி உபயோகப்படுத்துவதை இப்போது குறைத்துக்கொண்டிருக்கிறார்கள். நாட்டுச் சர்க்கரையை உபயோகப்படுத்துவது என்பது, இப்போது நடைமுறையில் வந்துவிட்ட காரணத்தினால், நம்முடைய நியாய விலைக் கடைகளின்மூலம் விற்பனை செய்யவேண்டும். ஏனென்றால், வெளிமார்க்கெட்டில் அதை வாங்க வேண்டுமென்றால், விலை அதிகமாக இருக்கிறது; எந்த நியாய விலைக் கடைகளிலும் நாட்டுச் சர்க்கரை வியாபாரம் செய்யப்படுவதில்லை; கொடுப்பதில்லை. ஆகவே, அதை விற்பனை செய்யும் திட்டத்தைச் செயல்படுத்தினால், தமிழகம் முழுவதும் உங்களை வரவேற்பார்கள்; நீங்கள் செய்கின்ற காரியத்தைப் பாராட்டுவார்கள். ஆகையினால், நியாய விலைக் கடைகளில் நாட்டுச் சர்க்கரை விற்பனை செய்வதற்கு நடவடிக்கை எடுக்க அரசு முன்வருமா என்பதைத் தங்கள் மூலமாகக் கேட்டு அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உணவு மற்றும் நுகர்பொருட்கள் வழங்கல் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. இரா. காமராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாட்டுச் சர்க்கரையை கிடங்குகளில் சேமித்து வைத்து நியாய விலைக் கடைகளுக்கு அனுப்புவது என்று சொன்னால், அதிலே பல்வேறு பிரச்சினைகள் இருக்கின்றன. பொதுவாக, காற்றிலுள்ள ஈரப்பதத்தை உறிஞ்சும் தன்மையைக் கொண்டது நாட்டுச் சர்க்கரை. கிடங்குகளில் அதைச் சேமித்து வைக்கும்போது, மெல்ல மெல்ல உருகி, பாகாக ஓடி, மற்ற பொருட்களையும் கெடுத்துவிடக்கூடிய சூழ்நிலை உருவாகும். அதுமட்டுமல்லாமல்; எறும்பு, ஈ போன்ற பூச்சிகளை அது எளிதாக ஈர்க்கக்கூடியதாகவும் இருக்கிறது. தற்போதுள்ள சூழலில் 35,500 மெட்ரிக் டன் சர்க்கரை நமக்குத் தேவைப்படுகிறது. 35,500 மெட்ரிக் டன் சர்க்கரையை நாம் கூட்டுறவு ஆலைகளிலும், அதேபோல, பொது நிறுவனங்களிலும் கொள்முதல் செய்து

2017 ஜூலை 7]

வழங்கிக்கொண்டிருக்கிறோம். எனவே, நாட்டுச் சர்க்கரையை அவ்வாறு பயன்படுத்த முடியாது; அவ்வளவு தேவையையும் பூர்த்தி செய்ய முடியாது. எனவே, அதற்கு சாத்தியக்கூறுகள் இல்லை என்பதையும், அதில் நடைமுறைச் சிக்கல்கள் இருக்கின்றன என்பதையும் மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 10–55

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. எம். இராமச்சந்திரன் அவர்கள்.*

திரு. எம். இராமச்சந்திரன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எதையும் சாதிக்கக்கூடிய நிலையில் இருப்பதுதான் அரசாங்கம். தனியார்களெல்லாம் நாட்டுச் சர்க்கரையைச் சேமித்து வைத்து வியாபாரம் செய்கின்ற சூழ்நிலை இன்றைக்கு இருக்கிறது. அதேபோல, நம்முடைய அரசாங்கமும் நாட்டுச் சர்க்கரையை எப்படிச் சேமித்து வைப்பது? அதை எப்படிப் பதப்படுத்தி வைத்துக்கொள்வது என்பதை அறிந்து இதனைச் செயல்படுத்த முன்வர வேண்டும். ஏனென்று சொன்னால், இன்றைக்குச் சர்க்கரை வியாதி உள்ளவர்கள்தான் நிறையபேர் இருக்கின்றனர். சட்டசபையிலேகூட சர்க்கரை வியாதி உள்ளவர்கள் நிறைய பேர் இருக்கிறார்கள். ஆனால், இந்த நாட்டுச் சர்க்கரையைப் பயன்படுத்துவதனால், சர்க்கரை வியாதி தொந்தரவு இல்லை என்று விஞ்ஞானிகள் சொல்கிறார்கள். சீனியைப் பயன்படுத்தினால், அதன்மூலம்* cancer *வருகிறது என்கிறார்கள்.* Chemical *போடுவதனால்தான் சீனி வெள்ளையாக இருக்கிறது என்றும், அதன்மூலம் தயாரிக்கப்படும் உணவைச் சாப்பிடுவதனால்* cancer *வருகிறது; உடல்நலம் கெடுகிறது என்றும் இப்போது சொல்லப்படுகிறது. ஆகையினால் நாட்டுச் சர்க்கரை, வெல்லம், பனை வெல்லம் ஆகியவற்றை உபயோகப்படுத்தினால்தான் ஆரோக்கியம் இருக்கும். ஆரோக்கியத்தைத் தேடுவதுதான் அரசின் வேலை. அதற்காகத்தான் சுகாதார இலாகா, உணவு இலாகா என்று பிரித்து வைத்திருக்கிறார்கள். அந்தக் காலத்திலே உணவு இலாகா என்பதுதான் முக்கியமான இலாகாவாக இருந்தது. பேரறிஞர் அண்ணா அவர்களின் காலத்திலேயே திரு.செ.மாதவன் அவர்கள் மிகச் சிறந்த அமைச்சராக இருந்தார் என்று சொல்வார்கள். அதற்குப் பின்னரும் உணவு இலாகா அமைச்சர்கள் மிகவும்*

[2017 ஜூலை 7

முக்கியமானவர்களாகக் கருதப்பட்டார்கள். தூங்குவதற்குக்கூட நேரமிருக்காது. இப்போது உங்களுக்கெல்லாம் எளிதாக இருக்கலாம். அதிக பொருளாதாரம் இருக்கிறது; பொருள் விளைகிறது; அது வேறு விஷயம். ஆனால், இன்றைக்கு மக்களைப் பாதுகாக்க வேண்டிய சூழ்நிலையில் அரசு இருப்பதால், நாட்டுச் சர்க்கரையைப் பாதுகாப்பது எப்படி? அதைப் பதப்படுத்தி விற்பது எப்படி என்று ஆராய்ந்து, அதற்குரிய நடவடிக்கையை எடுத்து மக்களைக் காப்பாற்ற வேண்டும் என்பதற்காகத்தான் இந்தக் கேள்வியைக் கேட்டிருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) "உறுப்பினர் ஏன் இந்த நாட்டுச் சர்க்கரையைப்பற்றிக் கேள்வி எழுப்பினார்" என்று உங்களுக்கு இந்தக் கேள்வி எளிதாகத் தெரியலாம். அப்படியல்ல; நாட்டுச் சர்க்கரை என்பது உணவுக்கு உகந்த ஒன்று, வீடுகள்தோறும் உபயோகப்படுத்துகின்ற ஒரு பொருள். "வெல்லமண்டி நடராஜன்" என்ற பெயரிலேயே ஓர் அமைச்சர் இங்கு இருக்கிறார். (மேசையைத் தட்டும் ஒலி) அவர் "வெல்லமண்டி" என்ற பெயரை விடமாட்டேன் என்கிறார். (சிரிப்பு) எனவே, இப்படிப்பட்ட சூழ்நிலையில், நாட்டுச் சர்க்கரையை நியாய விலைக் கடைகளில் விற்பதற்கு அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும், அதுதான் நியாயம் என்பதைத் தெரிவித்து, நாட்டுச் சர்க்கரையை நியாய விலைக் கடைகளில் விற்பதற்கு அனுமதி வழங்க அரசு முன்வருமா என்று தங்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உணவு மற்றும் நுகர்பொருட்கள் வழங்கல் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. இரா. காமராஜ்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தில் நியாய விலைக் கடைகளில் அரிசி மட்டும் வாங்கக்கூடிய குடும்ப அட்டைதாரர்களின் எண்ணிக்கை ஒரு கோடியே 80 இலட்சம். அரிசி வாங்கக்கூடிய அந்தக் குடும்ப அட்டைதாரர்களுக்கு மாதம் ஒன்றுக்கு இரண்டு கிலோ சர்க்கரை வழங்கப்படுகிறது. அதேபோல, அரிசி வேண்டாம் என்று சொல்பவர்கள்; அதாவது சர்க்கரை அட்டைகள்; அது பத்து இலட்சம் கார்டுகள் இருக்கின்றன. அந்த அட்டைதாரர்களுக்கு மாதம் ஒன்றுக்கு தலா 5 கிலோ சர்க்கரை வழங்கப்படுகிறது. மொத்தம் 35 ஆயிரத்து 500 மெட்ரிக்*

2017 ஜூலை 7]

டன் சர்க்கரை நமக்குத் தேவைப்படுகிறது. இந்தத் தேவையை நாட்டுச் சர்க்கரையைக் கொண்டு நாம் பூர்த்தி செய்ய முடியாது என்பதைத்தான் மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு ஏற்கெனவே நான் தெரிவித்தேன். அதுமட்டுமல்லாமல், பொங்கல் பண்டிகை மற்றும் இதர விசேஷ நாட்களில் மக்கள் நாட்டுச் சர்க்கரையைப் பயன்படுத்துவது கிடையாது. வெல்லம், உருண்டை வெல்லம் போன்றவற்றைத்தான் நமது கிராமப்புறங்களில் பயன்படுத்துகிறார்கள். எனவே, நாட்டுச் சர்க்கரைமீது மிகுந்த பற்றோடு, விவசாயிகளுடைய கோரிக்கைகளைக் கேட்டு, அவர்களுக்கு ஏதாவது செய்ய வேண்டுமென்கிற அடிப்படையில் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இந்தக் கேள்வியைக் கேட்டிருக்கிறார்கள். அவருடைய கேள்வி நாட்டுச் சர்க்கரையாக இருந்தாலும், நடைமுறைச் சிக்கல்கள் இருப்பதினால், அதைச் செயல்படுத்துவதற்கு வாய்ப்பு இல்லை என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 155, மாண்புமிகு உறுப்பினர் திரு. ச. வெற்றிவேல், மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் அவர்கள்.

155—

தரம் உயர்த்துதல்

***8378—திரு. ச. வெற்றிவேல்:**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஓமலூர் தொகுதி, காடையாம்பட்டியிலுள்ள ஆரம்ப சுகாதார நிலையத்தை மருத்துவமனையாகத் தரம் உயர்த்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு டாக்டர் சி. விஜய பாஸ்கர், மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,